# General Science Model Test Questions 19 in Tamil [Physics – 4]

1. ஒளியின் குறுக்கலைப்பண்பு எதனால் நிரூபிக்கப்படுகிறது?

(A) குறுக்கீட்டு விளைவு (B) விளிம்பு விளைவு

**(C) தளவிளைவு** (D) விலகல்

2. மின்சார இஸ்திரிப்பெட்டி குளிர அதிக நேரம் எடுக்கக் காரணம்

(A) கதிர் வீச்சுத் திறன் அதிகம் **(B) கதிர் வீச்சுத் திறன் குறைவு**

(C) உட்சுவர் திறன் குறைவு (D) உட்சுவர் திறன் அதிகம்

3. அடர்த்தி என்பது கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது

**(A) நிறை/பருமன்** (B) நிறை x பருமன்

(C) பருமன்/நிறை (D) இவற்றுள் எதுவுமில்லை

4. திரவத்தினுள் ஓரளவுக்கு மூழ்கியிருக்கும் ஒரு பொருளின் மீது செயற்படும் முடிவான மேல்நோக்கு அழுத்தம்

**(A) அந்த பொருளின் புவி ஈர்ப்பு மைத்தின் வழியாகச் செயல்படுகிறது**

(B) வடிவ மையத்தின் வழியாகச் செயல்படுகிறது

(C) அழுத்தத்தின் மையத்தின் வழியாகச் செயல்படுகிறது

(D) இவற்றுள் எதுவுமில்லை

5. குறுக்கலை z-அச்சு வழியாக செல்லும்போது ஊடகத்தின் உள்ள துகள்கள் கீழ்க்கண்டவாறு அசையும்

(A) z – அச்சு (B) x – அச்சு (C) y – அச்சு **(D) x-y தளத்தில்**

6. ஜீல் - தாம்சன் குளுமையானது

**(A) வெப்பநிலையைப் பொறுத்தது**

(B) வெப்ப நிலையைப் பொறுத்தது அல்ல

(C) வாயுவின் மூலக்கூறு எடையைப் பொறுத்தது

(D) வாயுவின் மொத்த நிறையைப் பொறுத்தது

7. புள்ளி செயல்பாடு தத்துவம் எங்கு உபயோகிக்கப்படுகிறது?

(A) மின்தேக்கிகள் (B) மின்தூண்டுச் சுருள்கள்

(C) மின்தடைகள் **(D) இடிதாங்கிகள்**

8. ஒரு ஜெட் விமான இயந்திரம் வேலை செய்யும் அடிப்படைத் தத்துவம்

(A) நிறை (B) ஆற்றல் **(C) நேர்கோட்ட உந்தம்** (D) கோண உந்தம்

9. சூரியனின் வெப்பநிலை காண உதவும் விதி

(A) சார்லஸ் விதி **(B) ஸ்டீ.ஃபனின் நான்மடி விதி**

(C) பாயில் விதி (D) கிர்சாப் விதி

10. கதிரியக்கக் கார்பன் வயதுக் கணிப்பு பயன்படுவது

(A) நோய்களைக் கண்டறிய

**(B) சரித்திரச் சான்றுகளின் வயதைக் காண**

(C) வளிமண்டலத்தில் கார்பனின் அளவைக் காண

(D) இவற்றுள் எதவுமில்லை

11. வீச்சு பண்பேற்றத்தைவிட அதிர்வெண் பண்பேற்றம் சிறந்தது, ஏனெனில்,

**(A) உருக்குலைவு இருக்காது** (B) உருக்குலைவு மிக அதிகம்

(C) உட்புற ஒலி உண்டாக்கப்படுவதில்லை (D) உட்புற ஒலியை வடிகட்டிவிடலாம்

12. நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி

**(A) சர்.சி.வி.இராமன்** (B) எஸ்.இராமானுஜன் (C) ஹெச்.ஜெ.பாபா (D) சர்.ஜெ.சி.போஸ்

13. நீரின் அடர்த்தி எந்த வெப்ப நிலையில் பெருமமாகும்?

(A) 0° C **(B) 4° C** (C) 100° C (D) -10° C

14. சென்டிகிரேட் வெப்ப நிலையை கெல்வின் அளவீட்டுக்கு மாற்றும் போது, கீழ்க்கண்டவற்றுள் எதை சேர்க்க வேண்டும்?

(A) 723 ° **(B) 273 °** (C) 373 ° (D) 180 °

15. ஒலி அலைகள் ---------------- அலைகள் ஆகும்

(A) மின் (B) காந்த **(C) இயந்திரவியல்** (D) மைக்ரோ

16. கதிரியக்கம்

(A) வெப்பநிலையால் பாதிக்கப்படுகிறது (B) அழுத்தத்தால் பாதிக்கப்படுகிறது

(C) மின்காந்தப் புலங்களால் பாதிக்கப்படுகிறது **(D) இவைகளுள் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை**

17. போக்குவரத்து சமிக்ஞைகளில் (வழிகாட்டி) வகை பூச்சு பூசப்படுகிறது

(A) சாதாரண (B) நின்றொளிர் (C) நீர் ஒட்டாத **(D) ஒளியைத் திருப்பும்**

18. ரேடியோ கோபால்ட் கீழ்க்கண்ட ஒன்றிற்கு பயன்படுகிறது

(A) தாவரங்கள் உட்கவரும் பாஸ்பரஸ் அளவை அறிய **(B) புற்று நோய் சிகிச்சையில்**

(C) தாளின் தடிமனைக் காண (D) அணுவின் அமைப்பை அறிய

19. ஸ்டீபான் விதிப்படி ஒரு கரும்பொருள் உமிழும் மொத்த ஆற்றல் அதன் ---------க்கு நேர் விகிதத்தில் இருக்கிறது

(A) T (B) $T^2$ (C) $T^3$ **(D) $T^4$**

20. சிறிய, பெரிய பொருள்கள் எல்லாமே ஒரே --------------- இல் கீழே விடுகின்றன

(A) திசைவேகம் **(B) முடுக்கம்** (C) உந்தம் (D) விசை

21. ஒரு மின்கடத்தியின் வழியே பாயும் மின்னூட்டங்கள்

(A) பாசிட்ரான்கள் **(B) எலக்ட்ரான்கள்**

(C) புரோட்டான்கள் (D) நேர்மின் அயனிகள்

22. ஒரு வில்லையின் 'திறன்' ------------ என்ற அலகால் அளக்கப்படுகிறது

(A) சென்டிமீட்டர் (B) மீட்டர் **(C) டயாப்டர்** (D) இவற்றுள் எதுவுமில்லை

23. கண்ணுக்குப் புலனாகும் நிறமாலையில் ஊதாவிலிருந்து சிவப்பை நோக்கி நகரும் போது அலை நீளம்

(A) குறைகிறது **(B) அதிகரிக்கிறது**

(C) மாறாமல் உள்ளது (D) ஒழுங்கற்ற மாறுபடுகிறது

24. ஒளி --------------- வடிவில் பரவுகிறது

(A) நெட்டலை **(B) குறுக்கலை**

(C) அழுத்த அலை (D) சனுக்குப் பெயர்ச்சி நிலை

25. கோள்களின் இயக்கத்தை கொடுக்கும் விதியை தந்தவர்

(A) நியூட்டன் (B) கலிலியோ (C) அரிஸ்டாட்டில் **(D) கெப்ளர்**

26. கீழ்க்கண்டவற்றில் எது எலக்ட்ரானிக் கணிணி வெளிகாட்டும் கருவியாக பயன்படுவது?

(A) புகைப்பட டையோடு (B) ஜீனர் டையோடு

**(C) ஒளி உமிழ்வு சந்தி (Leds)** (D) இவற்றுள் எதுவுமில்லை

27. $27^{o}$ C –ஐ பின்வருமாறு கூறலாம்?

(A) 250 K (B) 200 K (C) 400 K **(D) 300 K**

28. கீழ்க்கண்டவற்றுள் அணு உலையில் எது வேகத் தடுப்பானாக செயல்படுகிறது?

(A) பிளாட்டினம் (B) தோரியம் (C) யுரேனியம் **(D) கிராபைட்**

29. மீயொலிகளின் அதிர்வெண்

**(A) செவியுணர்வு வரம்புக்கு மேற்பட்டது** (B) செவியுணர்வு வரம்புக்குக்குறைவு

(C) செவியுணர்வு வரம்புக்கு சமம் (D) இவற்றுள் எதுவுமில்லை

30. ஒரு சாதாரண நுண்ணோக்கியில் உள்ளது

(A) குழிவில்லை (B) ஒரு புற குவிவில்லை

**(C) குவி வில்லை** (D) இவற்றுள் எதுவுமில்லை

31. அணுசக்தி மின் நிலையம் அமைக்கப்படாத இடம்

(A) கல்பாக்கம் (B) நரோரா (C) தாராப்பூர் **(D) டிராம்பே**

32. கிலோ வாட் என்பது கீழ்கண்டவற்றுள் எதனுடைய அலகாகும்?

(A) ஆற்றல் **(B) திறன்** (C) மின்னூட்டம் (D) மின்னழுத்தம்

33. மிக உயர்ந்த ஆற்றலை வெளியிடும் கதிரியக்கம்

(A) புற ஊதா (B) அகச்சிவப்பு

**(C) x-கதிர்கள்** (D) பார்வைக்கு புலனாகும் கதிர்கள்

34. மின்மோட்டார் என்ற கருவி

**(A) மின்ஆற்றலை இயக்க ஆற்றலாக மாற்றும்**

(B) இயக்க ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றும்

(C) இயக்க ஆற்றலை நிலை ஆற்றலாக மாற்றும்

(D) இவற்றுள் எதுவுமில்லை

35. டெஸ்லா என்ற அலகு

(A) காந்தச் செறிவு (B) காந்த திருப்புத்திறன்

**(C) காந்த தூண்டல்** (D) இவற்றுள் எதுவுமில்லை

36. மின் காந்த கதிர்வீச்சு செல்லும் திசை வேகம்

(A) $3 \times 10^{10}$ m/s **(B) $3 \times 10^{8}$ m/s** (C) 330 m/s (D) இவற்றுள் எதுவுமில்லை

37. மின்சார பல்புகளில் பயன்படும் இழை இதனால் செய்யப்பட்டது?

(A) இரும்பு **(B) டங்ஸ்ட்டன்** (C) தாமிரம் (D) இவற்றுள் எதுவுமில்லை

38. கடலின் ஆழத்தை கண்டறிய பயன்படும் கருவி எது

(A) ரேடார் (B) சோனார் **(C) ∴பேதோ மீட்டர்** (D) மிதவைமானி

39. தனிச்சுழி வெப்பநிலை என்பது

(A) $0^{0}$ C (B) $0^{0}$ F (C) $372^{0}$ C **(D) $-273^{0}$ C**

40. மின்சாரத்தைக் கண்டுபிடித்த பெருமை இவரைச் சாரும்

**(A) மைக்கோல் ∴பாரடே** (B) டபிள்யூ கில்பர்ட்

(C) ஏ.எம்.ஆம்பியர் (D) ஜி.எஸ்.ஓம்

41. ஏரியின் மேல்மட்ட நீர் உறையும் பொழுது அதன் அடியிலிருந்கும் நீரின் வெப்பநிலை என்னவாயிருக்கும்?

(A) $0^{o}$ C (B) $4^{o}$ C க்கும் மேல் **(C) $4^{o}$ C** (D) $4^{o}$ C க்கும் கீழ்

42. பறவைகள் பறப்பது நியூட்டனின் கீழ்க்கண்ட விதிகளின் அடிப்படையில்

(A) முதல்விதி (B) இரண்டாம் விதி

**(C) மூன்றாம் விதி** (D) இரண்டு மற்றும் மூன்றாம் விதி

43. எண்ணெய் விளக்கில் திரியின் வழியே எண்ணெய் உயர்வது

(A) அழுத்த வேறுபாட்டால் **(B) நுண்புழை செயல்**

(C) குறைந்த பாகியல் (D) ஈர்ப்பு விசை

44. மிக இலகுவான துகள்

(A) நியூட்ரான் **(B) எலக்ட்ரான்** (C) புரோட்டான் (D) ரேடான்

45. கீழ்க்காணும் பொருட்களில் எது அதிகமாக தன் வெப்ப எண்ணை கொண்டது?

(A) இரும்பு (B) தாமிரம் (C) பாதரசம் **(D) நீர்**

46. ஒரு திரவத்தின் பரப்பு இழுவிசை, அதன் வெப்ப நிலை அதிகரிக்கையில்

(A) அதிகமாகும் **(B) குறையும்**

(C) மாறாது நிலையாகும் (D) இவற்றும் எதுவுமில்லை

47. ஒரு 100 வாட் மின்விளக்கு ஒரு அலகுமின் ஆற்றலைப் பெற எடுத்துக் கொள்ளும் காலம்

(A) 1 மணி **(B) 10 மணி** (C) ஒரு நாள் (D) 60 மணி

48. சாதா உப்பு பனிகட்டியுடன் கலந்த பொழுது உறைநிலைப்புள்ளி

**(A) குறையும்** (B) அதிகரிக்கும்

(C) மாற்றம் அடையாது (D) முதலில் குறைந்து பின்னர் உயரும்

49. மின்னோட்டம் எப்பொழுதும் பாய்வது

**(A) உயர் மின் அழுத்தத்திலிருந்து குறைமின் அழுத்தத்திற்கு**

(B) குறை மின் அழுத்தத்திலிருந்து உயர் மின் அழுத்தத்திற்கு

(C) இவை இரண்டும்

(D) இவற்றுள் எதுவுமில்லை

50. ஒரு தனி ஊசலின் L மற்றும் T க்கு இடையேயுள்ள வரைபடம்

(A) வட்ட வடிவம் (B) பரவளையம் **(C) நேர்கோடு** (D) இவற்றுள் எதவுமில்லை

51. சூரிய கிரணம் ஏற்படுவது எப்பொழுதெனில்

(A) பூமி நிலவுக்கும் சூரியனுக்கும் இடையில் வரும் பொழுது

(B) நிலவு பூமிக்கு செங்குத்தாக இருக்கையில்

**(C) நிலவு சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வரும் பொழுது**

(D) இவற்றுள் எதவுமில்லை

52. ஒலி அலைகளை நாடாவில்பதிவு செய்யும் முறையை முதலில் கண்டறிந்தவர்

(A) ஆம்பியா (B) பெக்கரல் (C) ஃப்ளெம்மிங் **(D) பௌல்சன்**

53. ஒரு மின்மாற்றி பயன்படுவது

(A) DC மின்னழுத்தத்தை அதிகரிக்க

**(B) AC மின்னழுத்தத்தை அதிகரிக்க அல்லது குறைக்க**

(C) DC மின்னழுத்தத்தை குறைக்க

(D) DC கை ACயாக மாற்ற

54. சூரியனின் மேற்பரப்பு வெப்பநிலை

(A) 2000 K **(B) 6000 K** (C) 4000 K (D) 10,000K

55. விசையின் திருப்புத் திறனின் அலகு

(A) ஜீல் (B) வாட் (C) மீட்டர் **(D) நியூட்டன்-மீட்டர்**

56. கீழுள்ளவற்றில் எது ஆற்றலின் அலகு?

(A) வாட் **(B) ஜீல்** (C) நியூட்டன் (D) நியூட்டன்/மீட்டர்

57. குறைகடத்தியாக பயன்படும் பொருள்

(A) கார்பன் (கரி) (B) போரான் **(C) ஜெர்மானியம்** (D) ஆக்ஸிஜன்

58. நீர் உச்ச அளவு அடர்த்தி பெற்றுள்ள வெப்பநிலை

(A) $0^o$ C (B)$100^o$ C **(C) $4^o$ C** (D) $10^o$ C

59. வாயுவில் ஒலியின் திசை வேகம் எதைச் சார்ந்திருக்காது?

(A) வெப்பநிலை **(B) ஈரப்பதம்** (C) புவிஈர்ப்பு (D) அழுத்தம்

60. துணைக்கோள் ஒன்றில் சுற்றி வரும் விண்வெளி வீரனுக்குத் தெரியும் ஆகாயத்தின் நிறம்

(A) வெள்ளை **(B) கருப்பு** (C) கருநீலம் (D) கருஞ்சிவப்பு

61. நட்சத்திரத்தின் நிறம் கீழ்கண்ட ஒன்றை சார்ந்திருக்கும்?

(A) அதன் அளவு (B) பூமியிலிருந்து அதன் தூரம்

(C) அதன் எடை **(D) அதன் வெப்பநிலை**

62. ராக்கெட் விண்வெளியின் மேல்நோக்கி செல்வது

(A) அது காற்றை விட லேசாக இருப்பதால்

(B) சூரியனின் ஈர்ப்பு விசையால்

(C) தன் எடையை விட எடையில் அதிகப்படியான காற்றை இடம் பெயர்ச்சி செய்வதற்கான காற்றாடி பொருத்தப்பட்டிருப்பதால்

**(D) அடிப்பாகத்திலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள் ராக்கெட்டின் மீது செயல்படுத்தும் விசையால்**

63. இராமன் விளைவு வலியுறுத்தும் கொள்கை

(A) துகள் கொள்கை (B) அலைக்கொள்கை

(C) மின்காந்தக்கொள்கை **(D) குவாண்டம் கொள்கை**

64. தனி ஊசல் அலையும் போது, கயிற்றில் இழுவிசை எப்பொழுது மிக அதிகமாக இருக்கும்?

**(A) தனி ஊசலின் குண்டு மையத்தில் உள்ள போது**

(B) தனி ஊசலின் குண்டு அதிகப்படியான வீச்சில் இருக்கும் பொழுது

(C) தனி ஊசலின் குண்டு அலைவின் போது பாதி வழியில் இருக்கும் பொழுது

(D) இவற்றுள் எதுவுமில்லை

65. வாயு உஷ்ணமானி கீழ்க்கண்டவாறு செயல்படுகிறது?

(A) வாயுவை உபயோகப்படுத்துகிறது

**(B) வாயுவின் கனபரிமாண விரிவாக்கத்தினால் செயல்படுகிறது**

(C) ஜபத்தன்மை உள்ள வாயுவை உபயோகப்படுத்துகிறது

(D) இவற்றுள் எதவும் இல்லை

66. இது இலட்சிய வாயுவின் குணம் அதாவது

**(A) இரண்டு மூலக்கூறுகளுக்கிடையே கவர்ச்சி கிடையாது**

(B) இரண்டு மூலக்கூறுகள் ஒன்றையொன்று கவரும்

(C) எல்லா மூலக்கூறுகளும் நிலையாக இருக்கும்

(D) ஒவ்வொரு மூலக்கூறுக்கும் கனஅளவு உண்டு

67. மைக்ரோ அலைகள் ரேடாரில் பயன்படுத்தப்படும் காரணம் என்ன?

(A) ஒளி விலகல்

**(B) ஒளி பிரதிபலித்தல் மற்றும் உயர் அதிர்வெண்**

(C) குறுக்கீட்டு விளைவு

(D) விளிம்பு விளைவு

68. விண்வெளிக் கலத்திலிருக்கும் விண்வெளி வீரனுக்கும் ஆகாயம் பூரண இருட்டாக தெரிவதன் காரணம்

**(A) தன்னைச் சுற்றி வளிமண்டலம் இல்லாமல் இருப்பதால்**

(B) அவனை சுற்றியுள்ள ஊடகம் ஆகாயத்திலிருந்து வரும் வெளிச்சத்தை கிரகித்து கொள்வதால்

(C) அதிக உயரத்தில் அகச்சிவப்பு, புறஊதாக் கதிர்கள் மட்டுமே இருப்பதால்

(D) அதிக உயரத்தில் ஊதா நிறத்துக்கு கண் பார்வையற்றுப் போவதால்

69. ஒளி நேர்க்கோட்டில் செல்வது போல் தோன்ற காரணம் அதன்

(A) பெரிய அலை நீளம் **(B) குறைந்த அலை நீளம்**

(C) குறைந்த திசை வேகம் (D) அதிக விளிம்பு விளைவு

70. கியூரி அம்மையார் கீழ்க்கண்ட அவரது கண்டுபிடிப்புக்கு பிரபலமானார்

(A) இன்சுலின் (B) பெனிசிலின் **(C) ரேடியம்** (D) கோபால்ட்

71. இரண்டு இசைக்கவைகள் சமமான இயற்கை அதிர்வெண்களை கொண்டவை அவற்றில் ஒன்று மெழுகு பூசப்பட்டு அதிர்வடையச் செய்யும் போது அவை

**(A) விம்மல்களை ஏற்படுத்துகின்றன** (B) ஒத்ததிர்வுடனிருக்கும்

(C) திணிப்பு அதிர்வு ஏற்படுத்துகின்றன (D) குறுக்கீட்டு விளைவை ஏற்படுத்துகின்றன

72. கேதோட் கதிர் ஆசிலோஸ்கோப் பயன்படுவது

(A) கேதோட் கதிர்களை உருவாக்க (B) நேர்மின் கதிர்களை உருவாக்க

**(C) அலைவடிவங்களை அறிய** (D) எலக்ட்ரான்களை பற்றி அறிய

73. சூரியன் மற்றும் நட்சத்திரங்களில் ஆற்றலை உண்டாக்குவது

(A) கனமான தனிமங்களின் அணுக்கரு பிளவினால்

**(B) லேசான தனிமங்களின் அணுக்கரு இணைவால்**

(C) கன தனிமங்களின் அணுக்கரு இணைவால்

(D) இரசாயன விளைவால்

74. பூமிக்கு மிக அருகில் சுற்றி வரும் செயற்கை கோளின் சுற்று வேகம்

**(A) 8 கி.மீ/வினாடி** (B) 10 கி.மீ/வினாடி (C) 11 கி.மீ/வினாடி (D) 12 கி.மீ/வினாடி

75. பூமிக்கு மிக அருகில் சுற்றி வரும் ஒரு செயற்கை கோளின் சுற்று நேரம்

(A) 200 வினாடி (B) 400 வினாடி (C) 500 வினாடி **(D) 5000 வினாடி**

76. பாகியல் எண்ணின் அலகு

**(A) $NSM^{-2}$** (B) $NM^2$ (C) J (D) W

77. நீர்த்த திரவங்களின் சவ்வூடு அழுத்தத்தை எதற்கு ஒப்பிடலாம்?

(A) வாயுவின் விதிகள் (B) நியூட்டனின் விதிகள்

(C) திருப்ப விதிகள் **(D) விரவல் விதிகள்**

78. ரேடியோ மீட்டர் என்பது

(A) ரேடியோவில் பயன்படுவது **(B) அகச்சிவப்பு கதிர்வீச்சை அறியும் கருவி**

(C) ரேடியோலஜி துறையில் பயன்படுவது (D) ரேடியத்தை கண்டறிவது

79. தொலைக்காட்சி அலைகளின் மறுபெயர்

**(A) நுண் அலைகள்** (B) ரேடியோ அலைகள்

(C) புறஊதா அலைகள் (D) காஸ்மிக் அலைகள்

80. வோல்ட் மீட்டர் என்பது

**(A) மின்னழுத்தத்தை அளக்கும் கருவி**

(B) மின்னோட்டத்தை அளக்க உதவும் கருவி

(C) மின்தடையை அளக்க பயன்படுவது

(D) ஒரு மின்பகுப்புகள்

81. அணு உலைகளில் கிரா∴பைட் தண்டுகள் எதற்கு பயன்படுகின்றன?

(A) நியூட்ரான்களை உட்கவர **(B) நியூட்ரான்களின் வேகத்தை குறைக்க**

(C) எரிபொருளாக (D) கதிர்வீச்சை தடுத்து நிறுத்த

82. கீழ்க்கண்டவற்றுள் தொகுப்பில் பொருந்தாதது எது?

**(A) ∴பேட்மேன்** (B) காமினி (C) பூர்ணிமா (D) அப்ஸரா

83. கீழ்க்கண்டவைகளில் தொகுப்பில் பொருந்தாத பெயர் எது?

(A) நியூட்டன் (B) ஐன்ஸ்டீன் (C) யங் **(D) லிட்டில்பாய்**

84. கிளைடர் விமான இயந்திர திறன்

**(A) 0 H.P** (B) 100 H.P (C) 1000 H.P (D) 10,000 B.H.P

85. காற்று வீசும் வேகத்தை அளக்கும் கருவிக்கு பெயர்

(A) பி.எச். மீட்டர் (B) தெர்மா மீட்டர் **(C) அனிமோ மீட்டர்** (D) லக்ஸ் மீட்டர்

86. ஒலி அளவு ------------ டெசிபல்களை தாண்டும் போது ஒலி மாசு ஏற்படுகிறது

(A) 80 **(B) 120** (C) 45 (D) 200

87. ஒரு உலோக வளையத்தை சூடாக்கினால். ஆதன் உள்விட்டம்

(A) அதிகரிக்கும் **(B) குறையும்** (C) மாறாது (D) அதிரும்

88. ஒரு பனிக்கட்டி உருகினால் அதன் பருமன்

(A) அதிகரிக்கும் **(B) குறையும்** (C) மாறாது (D) உறையும்

89. பனிக்கட்டியின் உருகுநிலை

(A) $-7^{o}$ C (B) $10^{o}$ C (C) $1^{o}$ C **(D) $0^{o}$ C**

90. வாட் = வோல்ட் x ---------------

(A) ஓம் **(B) ஆம்பியர்** (C) மீட்டர் (D) Hz

91. நிலைக்காந்தங்கள் செய்யப் பயன்படும் பொருள்

(A) தேனிரும்பு **(B) எ.்.கு** (C) பித்தளை (D) வெண்கலம்

92. அதிவேகமாய் இயங்கும் எலெக்ட்ரான்கள் ஓர் உலோக இலக்கினால் திடீரென தடுத்து நிறுத்தப்படும் போது

(A) ஆல்பா கதிர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன (B) பீட்டா கதிர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன

(C) காமா கதிர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன **(D) x-கதிர்கள் தோற்றுவிக்கப்படுகின்றன**

93. பட்டியல் I-ஐ பட்டியல் II-உடன் பொருத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை கொண்டு சரியான பதிலைத் தேர்ந்தெடு

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (A) அணுக்கரு பிளவு | 1. ஹீலியம் |
| (B) அணுக்கரு இணைவு | 2. மருத்துவம் |
| (C) ரேடியோ ஐசோடோப் | 3. ஹைட்ரஜன் குண்டு |
| (D) கதிர்கள் | 4. அணுகுண்டு |

குறியீடுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **4** | **3** | **2** | **1** |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

94. தொலைக்காட்சிப் பெட்டி இவரால் கண்டுபிடிக்கப்பட்டது

**(A) ஜே.எல்.பேய்ட்டு (J.L.Baird)** (B) ரோஜர்

(C) ஸ்டீ.்.பென்சன் (D) ்.பிளமிங்

95. ரைட் சகோதரர்கள் இதனைக் கண்டுபிடித்தார்கள்

(A) இரயில் (B) டைனமைட் **(C) ஆகாய விமானம்** (D) வானொலி

96. வினாடி ஊசலின் அலைவு நேரம்

(A) 0.5 வினாடி (B) 1.0 வினாடி **(C) 2.0 வினாடி** (D) 1.0 நிமிடம்

97. நிலையாகவுள்ள ஒரு திரவத்தின் ஒரு புள்ளியில் செலுத்தப்படும் அதிக அழுத்தம் அனைத்துத் திசைகளிலும் சமமாகப் பரவுகிறது இத்தத்துவம்

(A) பாயில் விதி (B) சார்லஸ் விதி (C) அவகாட்ரோ விதி **(D) பாஸ்கல் விதி**

98. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க

I. வேலை செய்யப்பட வேண்டுமாயின், ஒரு விசை பொருளின் மீது செலுத்தப்பட வேண்டும்

II. விசை ஒரு இயக்கத்தை அல்லது இட மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

III. விசை இடமாற்றத்தை ஏற்படுத்தாமலும் இருக்கலாம்

IV. விசையும் பொருளின் இயக்கத் திசையும் செங்குத்தாக இருப்பின் செய்யப்பட வேலை அதிகமாகும்

(A) I மட்டும் சரியானது **(B) I மற்றும் II சரியானது**

(C) I, II மற்றும் III சரியானவை (D) எல்லாம் சரியானவை

99. எபிடியாஸ்கோப் என்னும் கருவி

**(A) திரையில் காட்டப் பயன்படுகிறது**

(B) கடலின் ஆழத்தை அளக்கப் பயன்படுகிறது

(C) திரவத்தின் அடர்த்தி எண் அளக்கப் பயன்படுகிறது

(D) வாயுக்களின் ஒலியின் திசை வேகம் அளக்கப் பயன்படுகிறது

100. வானம் நீல நிறமாகக் காட்சியளிப்பதற்கான காரணம்

(A) ஒளி எதிரொலிப்பு (B) ஒளி விலகல்

**(C) ஒளிச்சிதறல்** (D) ஒளியின் பூரண அக எதிரொலிப்பு